[8th March 1965

அப்படிப் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவதற்கு என்ன காரணங்களை பொதுக் கணக்குக் குழு கூறியிருக்கிறது என்று கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டிரெஷரி ஆபீசரைப் பொறுத்த மட்டில் அவர் மீது, 'பிராட், டிஸானஸ்டி' இல்லை என்பதுதான் புலப்பட்டது. அதன் பேரில் 'நெக்லிஜென்ஸ் ஆஃப்டியூடி' என்ற வகையில்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Train accident at Pallapatti on 23rd December 1964.

* 174 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that an accident occurred to Trivandrum Express at Pallapatti in Madurai district on 23rd December 1964;

(*b*) if so, the number of persons injured and the number died; and

(*c*) the relief measures taken by the State Government apart from those taken by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Four persons were killed and twenty- three injured.

(*c*) The Collector of Madurai and officers of the Police Department proceeded to the scene of the accident and personally supervised the rescue and relief operations and arranged for the removal of the injured to the Hospital at Madurai. The question of grant of any financial assistance by this Government does not arise.

திரு. வை. சங்கரன் : இந்த விபத்து ஏற்பட்ட உடனே உடனடியாக வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பொருள்களைத் தேடிப் பிடிக்க வெளிச்சம் இல்லாத காரணத்தால் அல்லல் அதிகமாகிவிட்டது என்று தெரிகிறது. இனியாவது ஒவ்வொரு வண்டியிலும் கார்டு வானிலே ஒரு சில 'பவர்ஃபுல்' டார்ச்சுகளை 'ப்ரொவைட்' பண்ண மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

கனம். திரு. எம் பக்தவத்சலம் : இப்போது அதைப்பற்றி ரயில்வே இலாகா விசாரணை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த விசாரணையில் புலப்படக்கூடியதெல்லாம் ரயில்வே இலாகாவினரால் கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ரயில்வே இலாகா நடத்தும் விசாரணை ஒரு அதிகாரியை கொண்ட விசாரணை. பொது விசாரணை—ஒரு நீதிபதியைக் கொண்ட விசாரணை அல்ல அது. இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று சில அதிகாரிகள் கருதுவதால், ஒரு நீதிபதியை வைத்தோ அல்லது விசாரணைக் குழு நியமித்தோ விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?

8th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி பார்லிமெண்டில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது அங்கே கேள்வி கேட்டு விடை அளிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விபத்துக்குக் காரணமான அன்னசமுத்திரம் ஏரியை ரயில்வே இலாகாவினர் "அபெக்டிங் டாங்க்" என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பிரகடனப்படுத்தி யிருந்தும், இதில் இருக்கிற ஏரிக்கரையை எம்பாங்க்மெண்டை இன்னும் மூன்று அடி உயர்த்த வேண்டுமென்று நெடுநாட்களுக்கு முன்பு நம் மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தும் அதை உயர்த்தாத காரணத்தினால்தான் இந்த விபத்து நடந்தது என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஏரியைப் பொறுத்த வரையில் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தக் கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் ஏதோ தவறிவிட்டது என்ற குற்றத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த விபத்து, அன்னசமுத்திரம் கண்மாய் உடைந்ததால் ஏற்பட்டது. ரெயில்வே "அபெக்டிங் டாங்க்" என்று பிரகடனப்படுத்தி அவர்கள் எழுதிய டைரக்ஷன்ஸ் இந்தச் சர்க்காரிடம் இருக்கிறது. ஆறு ஆண்டுகளாக அதை உயர்த்தாததால், மாக்சிமம் லெவல் பிடிக்காதிருப்பதால் இவ்வளவு உயிர்கள் பாதிக்கப்பட்டன. பல உயிர்கள் பற்றிய விவகாரம் இது. உயர்த்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ரெயில்வே அதிகாரிகள் அப்படி ஒரு உத்தரவு போட்டார்களா என்பதைப்பற்றி அந்த இலாகாவோடு தொடர்பு கொண்டு இந்தச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு தாங்கள் உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சபாநாயகர் அவர்கள் உத்தர விட்டால் அரசாங்கம் அதை கவனிக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த பள்ளிப்பட்டி ரெயில் விபத்தின்போது முதல் உதவி செய்யச் சென்ற அடுத்த ரெயில் விபத்துக்கு உள்ளானது உண்மையா ? அதில் ஏற்பட்ட சேதங் கள் எவ்வளவு ? காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Quarterly list of Gazetted Officers

* 175 *Q.*—SRI M. SHUNMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to revive the publication of the quarterly list of Gazetted Officers in the Madras State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It has been decided to revive the publication of the Quarterly Civil List.